




ஓலை 143| ஓசை 266| செப்டம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை

ந.மு.வேங்கடசாமிநாட்டார்



## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**

## பொருள்

**மழை பொய்த்துப் போனால் தெய்வத்திற்குத் தினமும் நடக்கும் பூசனையும் நடக்காது; ஆண்டுதோறும் கொண்டாடப்படும் திருவிழாவும் நடைபெறாது.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை!

பாவகை : வஞ்சித் தாழிசை




கன்னலினைச் சுமந்தாலும்
கன்னலின்தன் சுவையின்றேல்
என்னமண்ணோ என்றிடுவர்;
கன்னலைப்போல் நிற்கவேண்டும்.

மின்னலினைச் சுமந்தபோதும்
இன்னமுதாம் மழைப்பொழிய
எண்ணமறத் தல்போன்று
எண்ணத்தில் மறக்கலாமா?

கற்றவர்கள் கற்றபடி
நிற்றலின்றேல் கற்றறிந்தும்
கற்றறியா குருடராவார்
கற்றபடி நிற்றலேசீர்!




**இலக்கணக் குறிப்பு:**

ஒரு பொருள் மேல் குறளடி நான்கு மூன்றடுக்குகளாய் வருவது வஞ்சித்தாழிசை. ஒவ்வொரு அடியிலும் முதல் சீரின் மூன்றெழுத்துகளும் நான்கடியிலும் ஒன்றி வரும். மூன்றடுக்கின்றி தனித்து வராது. நான்கடிகளுக்கும் எதுகை மோனை மாறாது. ஒவ்வொரு சீரும் காய்ச் சீர்களாகவே வரும். காண்பதற்கு நான்கு அரையடிக் கொண்ட கலிமண்டிலம் போலவே இருக்கும். இருசீர் அடியானதால் ஒவ்வோரடியின் இரண்டாம் சீரில் மோனை வர வாய்ப்பில்லை.

## பா வகை: பஃறொடை வெண்பா



வாழ்வினில் முன்னேற வாகையைச் சூடிட
தாழ்வில் துவளாமல் தப்பைத் திருத்திட
பாழ்செயும் எண்ணத்தைப் பக்குவ மாக்கிட
காழ்ப்பை அகற்றி கடமையை ஆற்றிட
ஆழ்ந்த பயிற்சியை ஆவலாய் மேற்கொள
சூழ்ந்த இடரும் சுழன்றே ஒதுங்குமே
நாழ்விடுத்தே நாளுமே நாட்டம் நிறைத்திட
மாழ்குதல் நீக்கலே மாண்பு.

கவிஞர் செ. கலைவாணி

# ஐந்தொழிற்கிறை நீ



பாவகை : குறள் அந்தாதி

உலகினில் தன்னை உணர்ந்திட தெய்வம்
இலகுவாய் சாரும் இயங்கு

இயங்கிடும் நீயும் இயக்கிட வேண்டும்
முயலாமை விட்டு முனைந்து

முனைந்தே ஒழுகு முழுமை அறிந்து
வினைகளும் பேச வியந்து

வியந்தே இறையும் விழுவான் செயலில்
பயனாய் உனையறிய பார்

பார்தனில் ஐந்தொழில் பார்த்திடும் நேர்த்தியில்
ஊர்ந்திடும் உன்னுள் உலகு

கவிஞர் பூர்ணிமா சங்கர்

# தேவதை

**பாவகை : இணைக்குறள் ஆசிரியப்பா**

இன்னல் நீக்கி இன்பம் ஊட்டி
வன்மம் இன்றி வன்மை பேணி
தன்மை பெற்ற தக்கார்
தன்னலம் கருதா
இன்னலம் விரும்பிடும் இனியர்
உன்னதம் அடைய உற்றுழி உதவி
அன்பைக் காட்டியே அருள்வர்
பன்னல் நின்றே
நன்மை செய்தே நல்வழி நடப்பரே.



கவிஞர் செ. கலைவாணி

# நிதர்சனம்



கனவின் கரம் பற்றி
நடத்தல் சுகம்.
வெளிச்சத்தில்
தொலைந்த நிழலை
இருளில் தேடிப் பிடிப்பது
சாத்தியமில்லை.

கிளைகளில் ஈரம்
அற்றுப் போயிருப்பினும்
வேரின் அடியில் மண்
காத்திருக்கும் ஈரம்.
நிர்ப்பந்தம்
இறுக்கிப் பிடித்திருப்பினும்
தன் நிலைச் சுயம்
உணர்த்திடும்.

கோபுரம் நின்றிருப்பதால்
உச்சியில் உயர்ந்து
நிற்கிறது கலசம்.
நதியுறிஞ்சிய மீதமே
நதியில் ஓடும் வெள்ளம்.

உன் அர்த்தமுள்ள வாழ்வை
ஒளிவு மறைவின்றி வாழ்ந்திடு.
அதுதான் பிறப்பின் நிதர்சனம்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தோல்வி என்ற பக்கமில்லா கற்றல் பாடம்

அறிவின் நூலில் தோல்வி பக்கம் இல்லை,
ஒவ்வொரு தவறும் புதிய பாடம் சொல்லும்.


முயற்சி நம் தோழி, சிந்தனை நம் தோரணம்,
தீராத முயற்சி ஒளியாய் வழிகாட்டும்.

தோல்வி ஒரு பெயர் மட்டுமே, உண்மை இல்லை,
பிழை என்றால் பாடம், அறிவை தரும்.

ஒவ்வொரு நாளும் கற்றல் மலர்கிறது,
மனதை மாற்றும், வாழ்வை ஒளியாக்கும்.

மனதில் உறுதி, உள்ளத்தில் ஆர்வம்,
கற்றல் என்ற பாடம் என்றும் தொடரும்.

தோல்வி என்ற பக்கம் எங்கேயும் இல்லை,
ஒவ்வொரு முயற்சியும் வெற்றி எனும் வாசல் திறக்கும்.



கவிஞர் பானு அப்துல்லா



பெண் பிறவி எடுத்தவள் இந்த
அகிலத்தை ஆள வந்த இளவரசி
அவள் இன்றி இந்த அண்டத்தில் ஏதுமில்லை.
அடக்கி ஆள நினைக்காதே
நெருப்பாய் எழுந்திடுவாள்.
தன்னை தானே பாதுக்காத்து
கொள்வதில் திறமை மிக்கவளே.
பெண்களை போற்றி நடப்போம்
தனக்கென்ற அடையாளத்திற்காக வாழும்
பெண்களை தொந்தரவு செய்யாதீர்.

கவிஞர் மா. மோனிஷா



வேலை முடித்து
ஜாமத்தில் வீடு வரும்
அப்பாக்களுக்குத்தான் தெரியும்
தன் பிள்ளை
அரைக்கண் தூக்கத்தில் விழித்திருப்பது
அவர் வாங்கி வரும்
பண்டங்களுக்காகத்தான் என

வயது கடந்தும்
மாறா குறும்புத்தனங்கள்
நினைவுகளின் ஆழத்தில்
புதைந்திருப்பது
ஆச்சரியப்படத்தக்கதல்ல
ஆதரிக்கத்தக்கது

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# சிறகடிக்கும் பருவம்



அந்த நாள் ஞாபகம்
அட்டை படங்கள் கொண்டுவர
கனவுலகில் சஞ்சாரம்
நேற்று நேற்றாகிப் போனது!

அரை ஆடைகளோடு
ஆடிப் பாடி விளையாடிய நாட்கள்
சரியான உடற்பயிற்சி
உடலுக்கும் மனதுக்கும்
உற்சாகம் கொடுத்தது அன்று!

நேரம் மணி ஓடிடவே பின்வங்கும்
நோயும் இல்லை நொடியும் இல்லை
பகற் பொழுது நீண்ட நேரம் காத்து நிற்கும்
இரவினை வாங்கிக் கொள்ள!

நல்ல காற்று நலம் தரும் சுவாசம்
இல்லை இப்போ சூழலில்
நல்ல சுவாசம் தேடுவது
நலம் தேடிப் போவது போலாகுமே!

வியர்வையில் குளித்து
விருந்துண்டு விளையாடி
மகிழ்வு கண்டு
மண்மீது கல்வி கற்று
கடுகளவும் பேதம் பார்த்திடா காலம்
மீண்டும் வராதோ?

மாடமாளிகைகள் இல்லை
மாறாக ஓலைக் குடிசை
விரிந்த நிலப் பரப்பு
விரித்து நிற்கும் பச்சை கம்பளம்
நினைத்து பார்த்தால் இனிக்கும்
அணைத்துப் பார்த்தால் இழுத்திடுவாள்
அவள் வசம்!

கனவில் நின்ற என்னை
கட்டிணைத்த பிஞ்சுக் கரங்கள்
திகைப்புடன் விழிக்க
"நேரம்" சரி போவோமா
"வாரம்" ஒருமுறை காற்று வாங்க
கடற்கரை காண்போமா?

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# மழையிரவால் குளிர்ந்த நிலம்




மழையென்றால் மகிழ்ச்சிவரும் ; மாந்தர் வாழ்வார் ;
மண்வாழும் ; தாவரங்கள் செழிக்கும் வளரும் !
உழைத்திடுவோர் மண்கீறி நுண்மை தருவார் ;
உட்புறத்தே வாழுமுயிர் பிறக்கும் ; சிறக்கும் !
பிழையிலாமல் பெய்திட்டால் இரவில் , நன்றே ;
பிள்ளைகளும் பள்ளிசெல்ல தொல்லை இல்லை !
பழையனவாம் மரமெல்லாம் வீழும் தன்னால் ;
பாங்குறவே அரசினரும் விரைந்தே வாரீர் !

இரவினிலே பெய்திடுங்கால் அச்சம் வருமே ;
ஏரிகுளம் நிறைந்திட்டால் ஊரில் வெள்ளம் !
அரட்டிடுமே வானத்தே மின்னல் இடியும் ;
அக்கறையாய் வானிலையம் அறிக்கை கொடுக்கும் !
பரபரப்பாய் தொண்டரெல்லாம் சேவை செய்வர் ;
பால் அரிசி பண்டமெல்லாம் தேடித் தருவார் !
வரவேற்போம் நன்மழையை நிலமும் குளிர ;
வாழ்ந்திடுமே நிலத்துயிர்கள் உள்ளும் புறமும்!

கவிஞர் ஆ. ச. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# நிலவே முகம் காட்டு



என்னவள் முகம் நிலவாகிய போது
திரையிட்டு மறைத்தாள் அவளது முகத்தை
எனது கண்கள் ஏங்கியது பார்க்க
தினமும் வருகைக்காக காத்திருந்து பார்த்த
ஒவ்வொரு நொடிப் பொழுதும் மனதில்
ஏதோ சொல்ல நினைக்க என்னவளின் கண்கள்
என்னிடம் பேசியது மல்லிப் பூவின்
வாசம் அருகே இழுத்து செல்ல
முத்தமிட நினைத்தாலும் முடியவில்லை முகம்
காட்டாத நேரத்தில் முகவரியும் தெரியாது.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நீயாக மாறிவிடு

உன் மனசு
வறண்டு
மாசுபட்டுக் கிடக்கிறது
ஆனால்
நீ ஏனோ
மூடி மறைக்கிறாய்

நீ குழம்பியது போலவே
பிறரையும்
குழப்பி விட்டு
புத்தன் போல்
நடித்து
நாடகமாடுகிறாய்

சாதீய சங்கெடுத்து
ஊதி ஊதி
ஊரைக்கூட்டி
மூளைச்சலவை செய்து
காதலை
நிர்மூலமாக்குகிறாய்

மனிதம்
பேணாத
சாம்ராஜ்யங்கள்
மண்ணுக்குள் புதையுண்ட
வரலாறுகளை
நீ கேட்டதில்லையா?

இனியாவது
பகுத்தறிவு கேடயத்தை
சூட்டிக்கொள்
இல்லையேல்
உரிமை சுனாமியில்
உருக்குலைந்து போவாய்!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி



மாலைநேரத்து பகலவனும்
ஓய்வெடுக்கும் நேரமிது
வானத்து முகில்களும்
அலையலையாய் எழுந்திடுமே

சிவந்திடும் இதழ்களாய்
அந்திநேரச் செவ்வான அழகினிலே
இதயமும் இதமாகுதே

இயற்கையின் எழில்
இதயத்தை வருடுகிறதே
வெண்ணிலவும் உலாவந்திட
குளிர்ச்சியும் வந்ததே

விண்மீன்களும் கண்சிமிட்டி
மெல்ல எட்டிப் பார்க்கும் நேரமிதுவே
கற்பனைக்கு பஞ்சமில்லை
கவிதையும் துளிர்த்திடுதே

எண்ணங்கள் வண்ணமாகி
என்னுள் கலந்திடுதே
ஈர்ப்பான உள்ளத்தில்
ஈடுபாடும் கூடிடுதே

அந்திநேரச் செவ்வான
அழகினிலே
மனமும் லயித்திட
மகிழ்வும் உண்டானதே

மயங்கும் வேளையிலே
உணர்வுகளின் பரிமாற்றமே
இதழ்களின் புன்னகையில்
ஓராயிரம் இன்பங்களே

செவ்வானச் சிவப்பில்
கரைந்திடும் கவலையதுவே
இயற்கையின் படைப்பில்
எண்ணற்ற விந்தையே

மாசின்றி இப்பூவுலகை
பாங்காய் காத்திடுவோமே
சந்ததிகளின் வாழ்வது
சஞ்சலமின்றி இருந்திடட்டுமே

ஒன்றாய் இணைவோம்
ஓராயிரம் நன்மைதனை பெற்றிடவே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

செம்மர
மரப்பாச்சி சோடி ஒன்றும்;
கருங்காலி மரப்பாச்சி சோடி ஒன்றும்;
உலா போகும் திருவீதி உலா!
வருடா வருடம்
பத்தே நாட்கள்
பட்டின பிரவேசம்
வெறும் பத்தே நாட்கள்!
பளபள பட்டு சட்டை
பட்டில் சரிகை தலைப்பாகை.
கருக்கரிவாளாய் முறுக்கிய மீசை!
பொன் மணியும்
மாணிக்க மணியும்
பரவலாய் பின்னின
சேலையும் ரவிக்கையும்;
ராசாதி ராசரை என்றும்
பிரியாமல் இருக்கும் பேரரசிகளும்
பெருமிதமாய், பதவிசாய் , கொலுவிருப்பர்!
ஆக:
அவர்களுக்கே முதல் தாம்பூலம்!
பொம்மைகளாய் இருந்தாலும்
அரசருக்கு உரிய
அனுபோகம் அவருடையதே!
வேறு எவர்க்கு?



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# உறுப்பு நலன் அழிதல்

## அதிகாரம் : 124

என்னவனைப் பிரிந்தால்
விழிகள் அழுகின்றனவே.
மலர்நாணுறச்செய் விழிகள்
தானே நாணுகின்றனவே.

என்கண்கள் நீர்கோர்க்க
கண்ட என்னிடமது.
என்னவனின் அன்பிலாமையை
எடுத்துரைப்பதாய் உள்ளதே.

என்னவனை மணந்தபோது
என்தோள்கள் பூரித்தனவே.
இன்று பிரிந்தமைக்காய்
தோய்ந்து வாடுகின்றனவே.

என்னவனைப் பிரிந்த
என்தோள்கள் மெலிந்தனவே.
கைவளையல்களும் தானே
கழன்று ஓடுகின்றனவே.

கழன்றோடும் வளையல்களும்
அழகிழந்த தோள்களும்.
என்னவன் எனைப்பிரிந்த
கொடுமையைச் சொல்கின்றனவே.

அழகிழந்த எனைக்கண்டு
தோழியவள் வருந்தியழுது.
என்னவன் கொடுமையாளன்
எனக்கூறிட உளம்வாடுதே.



என்மனமே! மெலிந்ததோள்கள்
என்னவனைப் பழிப்பதை.
அவனிடம் போய்க்கூறி
தற்பெருமை தேடிக்கொள்ளேன்.

அணைகரத்தையவன் சற்றேதளர்த்த
அவனைப் பிரிந்திடுவோமோ.
எனிலென்செய்வேனென நெற்றி
பசலைநிறங் கொண்டதே.

காதலியைத் தழுவியபோது
காற்று ஊடேநுழைந்ததால்.
காதல்விழிகளது உடனே
பசலைநிறங் கொண்டனவே.

நெற்றியின் பசலைகண்டு
விழிகளும் கூடவே.
பசப்புற்று நிறம்மாறி
காமத்தால் துன்புறுகின்றனவே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# முதியோர் இல்ல வாசல்

கையிருப்பை எண்ணாமல்
கணக்காய் வாங்குவாள்
கடைகளில் பொருள்கள்.
ஆண்டுகள் பலவாகியும்
அவனது நல்லது கெட்டதுகளை
மறக்காமல் ஒப்பிப்பாள்.
பிறந்த நாள் தொடங்கி
பட்டம் பெற்ற நாள்வரை
கிழமைகூட சேர்த்துச் சொல்வாள்.
உணவின் சுவை தொடங்கி
உடுக்கும் ஆடை வரை
எல்லோரது விருப்பத்தையும்
நினைவில் வைத்திருப்பவளுக்கு
எப்போதுதான் பிறந்தோம்
என்பது தெரியாதென்பாள்.
தனக்கான நேற்றையும்
தொலைத்துவிட்டு
எதிர்காலத்தைத் தேடியபடி
மகனிடம் கெஞ்சுகிறாள்
வீட்டுக்கு அழைத்துப் போவென
முதியோர் இல்ல வாசலில் நின்றபடி.




கவிஞர் இளையவன் சிவா

# காத்திருப்பு

வழிப்பார்த்த விழியோடு வாசலில் நிற்கிறேன்
ஏக்கத்தில் ஏங்குகிறேன் துணையின்றி தவிக்கிறேன்
உன்மேல் காதலால் அவதிப்படுகிறேன் ஆருயிரே
என்னையும் உன்னிடம் தந்து நாளுமானதே
புரிதலின்றி பிரிந்தவளே என்னோடு சேர்ந்திடு
இல்லற சுகத்தினை அள்ளித்தருவேன்
ஊடல்வந்து மாயமாவதும் இயற்கையே
காதலும் மோகமும் தாம்பத்திய சுகமே
நேசத்தைத் தந்தவளே நிம்மதியைத் தருவாயா
நீயின்றி நானில்லை உணர்ந்தால் இனித்திடுமே
சிவனும் சக்தியும் இணைதலே மகிழ்வாகும்
என்னோடு சேர்ந்திடு வலியோடு காத்திருக்கிறேன்



கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

# வாழ்க்கைத் துணை நலம்



இல்லற அணிகலனாம் நற்குணங்களோடு
எக்கனமும் பொருளாதார சிக்கனத்தாளே
நல்லறம் நடாத்தும் தனியழகு நிறைந்த துணைவியே

சிறந்த நற்குணங்கள் நயனோடு
மனையாளிடம் இல்லையெனில்
நிரந்தரமாய் வாழ்வில் பயனிலையே

நற்குணம் மனையாளிடமே
மிக்கிருப்பின் சற்குணமும் இல்லில் நிறைந்தது
தினையளவும் குணமின்றேல் சகலமும் குறைந்தது

கற்பென்னும் மனவுறுதியை
மனையாள் பெற்றாலெனின்
கற்பகத் தருவாய் வலம் வருவான் துணைவனே

பிற தெய்வம் தொழாது
கணவனையே தெய்வமாகத் தொழுபவளே
சிறந்த வான் மழையை மண்ணில் பொழிய வைப்பளே

கற்புநெறி தவறாமல் தன்னையும்
கணவனையும் காப்பவள்
அற்புதமான புகழோடு
கடமை தவறாத கட்டுக் கோப்பவளே

இல்லத்தில் சிறை வைத்துக் காத்தல்
மனையாளுக்கு அழகல்ல
உள்ள ஒழுக்கமே காவல் காத்தல் பேரழகு

மணாளனை வணங்கிப் பேரன்பை பெறும் மகளிர்
விண்ணுலக தேவர்களிடம் அடைவர் சிறப்பு

கற்பினால் ஒருமிக்கா மனையாளைப் பெற்றோன்
செறுநரிடம் பெருமிதம் இழந்து பேரிடர் உற்றோனே

நற்குண மங்கையே இல்வாழ்வின் மங்கலம்
நன்மக்கட்பேறே வாழ்க்கையில் அடுத்த அங்குலம்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

அம்மனுக்கு ஒன்பது ராத்திரி நவராத்திரி!
நவராத்திரி அம்மன் கொலுவில் வீற்றிருக்கிறாள்!
பட்டாடை உடுத்தி ஆபரணத்தில் அலங்கரித்து!
வாசனை மலர்களைக் கொண்டுதான்!
இறைவனை வேண்டிக் கொண்டால் நிச்சயம்!
நிறைவேற்றி தரும் சக்தி கொண்டவள்!
சக்தியின் ரூபம் மகிஷாசுரமர்த்தினி அவதரித்தவள்!
அழகான பொம்மைகள் கண்ணை கவரும்!
இனிமையான பாடல் பாடும் போது!
மனம் பரவசத்தில் துள்ளி குதிக்கிறது!
நலம் தரும் நவராத்திரி
நவராத்திரியில் ஒன்பது இரவுகள்
வழிபாடுகள் முதல் மூன்று நாள்
துர்க்கை அம்மன் கொலுவில் வீற்றிருக்கிறாள்!
அலைமகளும் கலைமகளும் கொலுவிற்கும் ராத்திரி
மகிழ வைக்கும் மகத்தான ராத்திரி!
சக்தியின் புனித தன்மையை உணர்த்தும் நவராத்திரி!
பெண்களுக்கு உரிய நவராத்திரி!
ஒன்பது ராத்திரிகள் அம்மனுக்கு
பக்தியுடன் விரதம் இருந்து பாமாலை பாடி
மனம் உருகி வேண்டினால்
நினைத்த காரியம் கைக்கூடும்!
சக்தியின் மறு உருவமே மகிஷாசுரமர்த்தினி ஆவாள்!
விஜயதசமியன்று மகிஷாசுரனை வதம் செய்து
உலகிற்கு தீயதை அழித்து நல்லதை நிலைநாட்டும்
பேராற்றல் சக்தி கொண்டவள்!



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# மாமழை போற்றுவோம்!



வானம் வழாது பெய்தாலும் புவியியல்
வாழ்கிறது இன்றும் தண்ணீர் பஞ்சம்;
வாழும் மனிதர் ஒவ்வொருவருக்கும் குடித்திட
வேண்டும் மூன்று லிட்டர் குடிநீரேனும்!

வியர்த்து நாறும் மானுட உடம்பை
விடியற் காலையில் குளிர்ந்திட செய்திட
வேண்டும் நமக்கு ஒருகுடம் தண்ணீரேனும்;
வனப்பு தந்திடும் நமது ஆடைகள்
வீச்சம் நீங்கி கமகமவென மணந்திட
வேண்டும் தண்ணீர் பற்பல குடமாய்!

மாக்கள் குடித்திட வேண்டுமிங்கு தண்ணீரே;
மரங்களும் செடிகொடிகளும் பசுமைக்காட்சி நல்கிடவும்
மனிதர் வாழ்வு செழித்திடச் செய்யும்
மாண்புடை தொழில்கள் பற்பல ஓங்கிடவும்
மண்ணிற்கு வேண்டும் வானவமுதாம் மழையே!

தண்ணீர், தண்ணீரென தாகம் தீர்க்கும்
தண்ணீரைத் தேடியலைவது இன்றும் நடக்கிறதே!;
தண்ணீர் தேடியலைபவரில் பெண்ணோடுவாணு மிருந்தாலும்
தண்ணீராம் நன்னீர் வேண்டி தாரகைகளே
தரணியில் அதிகம் அலைய காண்கிறோமந்த
தாரகைகள் தங்கள் குடும்பச்சுமையைச் சுமப்பதாலே
தங்கள் தலைகளில் குடங்களைத் தாங்கி
தலைவிதியென தலைவலிப் பொறுத்து அலைகின்றார்!

தலைவிதி இதனை மாற்றிட விரும்பினால்
தரணியில் வாழும் மக்கள் யாவரும்
தரணியில் பெய்யும் மழைநீரைச் சேமிப்பீரே!
தவித்த வாய்க்கு தண்ணீர் வேண்டுமெனில்
தவறாது மாமழை பொழிந்திட வேண்டும்;
தரணி வாழ்வோர் மழையைப் போபோவென
துரத்தாது மழையை போற்றி வரவேற்பீரே!

---

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்

(சிலப்பதிகாரம்:1: 1-9)

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

தமிழ் திரை உலகில்
தரமான பாடல்களின்
அபூர்வ அகராதி

இசையால் இதயங்களில்
இறைவனாய் குடியிருக்கும்
சங்கீத சாமி

எல்லா பயணங்களும்
உங்கள் இசையின்
ஆளுமையில் உற்சாகமாய்

ஆயிரம் உறவுகள்
உடனிருந்தாலும் உங்கள்
இசையே உற்ற துணையாய்

இதயத்தின் வறுமை
களைய உங்கள் இசை
சாரல் மழையாய்

தமிழ் அன்னையின்
கரங்களில் நீங்கள் மட்டுமே
இசையின் ரேகைகளாய்

ஏழு ஸ்வரங்களுக்கும்
உங்கள் முகமே
அழியாத முகவரியாய்

தடுமாறும் மனதிற்கு
உங்கள் திரை இசையே
நிம்மதியின் கடிவாளமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அனுபவம்!

வாழ்க்கையின் கற்றல் நிறுவனம்
வயது, பால், சாதி பாராது
சொல்லிக் கொடுத்திடும் நிறுவனம்
இதன் தலைப்பு
அவரவர் திறமைக்கு ஏற்ப வழங்கப்படும்
அடிபட்டு அழுது காயங்களை ஆற்றிவிட
காலங்களில் வித்தியாசம்
சம்பவங்கள் திரண்டு நின்று
சாதக பாதக நிலையினை
சான்றிதழாக கொடுத்து நிற்கும் அனுபவம்!
மூப்பும் நரையும்
அவரவர் அனுபவம் சொல்லிடும்
காலங்களின் காட்சி தளவாடி!



கவிஞர் திருமதி. ஜா. கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# தொலைந்த அன்பு

அன்பாக பக்கம் வந்து
ஆசையாக அரவணைத்து

என் மீது நிலை பெரும்
அளவில்லா நேசம் தந்தவனே

ஏன் என்னை விட்டு தூரம் ஆனாயோ?
நெடுநாள் அன்பில் குறைவை கண்டேனே

உன்னில் பல மாற்றங்கள் நான் கண்டாலும்
உன்னில் அதே அன்பே எதிர்பார்த்தேனே

திடீரென திருமண அழைப்பிதழை நீட்டினாயே
என்னை விட்டும் நெடுந்தூரமானாய்

இருந்தும் உன் அன்பான நினைவுகள்
என்னை விட்டு தூரமாகவில்லையே

மீண்டும் காண்பேன் என்ற ஆவல் கொண்டேனே

ஏனோ உனக்கு என்னை
தூரமாக வேண்டிய சூழ்நிலை வந்ததோ புரியவில்லையே

தொலைவில் இருக்கும் வானில் மழையை எதிர் பார்க்கும் பூமி
போலவே நானும் இதயம் உன் அன்பை சுமக்கிறதே

இருந்தும்,எனது உயிரே நெடுந்தூரமான உன் அன்பை
சுமந்து கொண்டு உயிர் போகும் வரை வாழ்வேனே நானே



கவிஞர் எ எம் முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி (இலங்கை)

# தலைமுறைச் சிற்பி

அறிவெனும் விளக்கேற்றி அறம் காணவைப்பவர்
ஏற்றிவிடும் ஏணிப்படியாய் ஏற்றம்காண வைப்பவர்!
அறநெறியை புகட்டி அன்பை விதைத்தவர்
சிற்பியாக என்னை சிலை வடித்தவர்

ஏழுத்தறிவை ஊட்டி எழுச்சிக்காண வைத்தவர்
இழிச்சொல் வரா இன்பத்தை தந்தவர்
மாணவச் சமுதாயத்தை மாண்புரச் செய்தவர்
இன்புற்று பணிசெய்துக் கிடப்பவர்


தலைமுறைத் தழைத்திட தன்நலமில்லா உழைத்தவர்
இளையோர் வெற்றிபெற பாதை வகுத்தவர்
பகுத்தறிவை ஊட்டி பக்குவம் தந்தவர்
பாகுபாடு யின்றி அன்பை பொழிபவர்

நம்பிக்கை விதைத்து நல்வழிப் படுத்துபவர்
இம்சைகள் பலதந்தினும் இன்முகத்தோடு ஏற்றவர்
மாணவரை செதுக்கும் சிற்பியாக ஆனவர்
மண்ணையும் பொன்னாக்கும் வல்லமைப் படைந்தவர்

ஆசிரியர்யெனும் அற்புத விளக்கின் ஒளியில்
நாமும் வெளிச்சம் பெறுவோம்
இருளைப் போக்கி கல்வி பெறுவோம்
தலைமுறை செழிக்க வழி வகுப்போம்

ஏதும் அறியா குழந்தை கூட
ஊதும் குழலாய் மாறும் இங்கு
அறிவினை தேன் போல் ஊட்டிடும்கரம்
அருளின் வடிவமே ஆசிரியரின் மனம்!

ஆசிரியரைப் போற்றி வணங்கிடுவோம்
சிறந்த வாழ்த்து சொல்லிடுவோம்
நன்றி மறவா வாழ்ந்திடுவோம்
என்றும் ஆசிரியர் அருளை பெற்றிடுவோம்.



கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

நாளை செய்வோம்
என்பதை விடுத்து
இன்றே செயலை
நலமுறச் செய்தால்
வெற்றி நிச்சயம்
நமக்கே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அம்மா



பக்தனாய் பிறந்து
பித்தனாய் ஆனேனே
வலியறிந்த ஒருவருக்கு
வழியறிய இயலாது
வளி நிறையா வாழ்வில்
ஒளி நிறையா போகும்
மதியோடு மிளிரும்
பிறையாய் உருகி
சருகாய் விழுந்து
கனலில் மறைய
மெழுகாய் கரைந்தேனே
மௌனத்தில் உறைந்தேனே

கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை


# வேர்வையின் அந்தாதி

வேர்வை நனைந்ததிலே
வாழ்வு பிறந்ததே

தேர் போலச் சுழன்றிடும்
உலகம் சிரித்ததே

தேய்ந்தது காயம்,
ஆனால்
நினைவாய் நிலைத்தது

வேர்வைதான் உழைப்பின்
முத்து மிளிர்ந்ததே.



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

# சொல் எடுத்து பாட வந்தேன்

சொற்கள் மணமிக்கவை,
வண்ணமயமானவை!

சொல்மலர்கள் இதயத்தோட்டத்தில்
சிந்தனை மொட்டுகளாய்
இதழ் விரிக்கின்றன!

சொல் மாலையின் மலர்கள்
காய்வதில்லை, உதிர்வதில்லை,
மணம் சுருங்குவதில்லை!

பாட்டாளிகளின் தோள்களுக்கு
மகுடம் சூட்ட,
செஞ்சொற் புனை மாலைகள் விரும்புகின்றன!

மானுடத்தின் மாண்பும்,
அவரது பண்பும்
பாடுவதே மகிழ்ச்சி!

கருணை பொங்க பக்தியை பாடலாம்;
அன்பு சிறக்க காதலை பாடலாம்!

பாட்டு ஒரு விவசாயம்;
பயிர்கள் பல விளையும்!
பாட்டு ஒரு ஆகாயம்;
நட்சத்திரங்கள் பல ஒளிரும்!

பாட்டு ஒரு கலைக்கூடம்
சித்திரங்கள் ஜொலிக்கும்!
பாட்டு ஒரு நூலகம்
அறிஞர் உள்ளம் நிறையும்!



பரணிபாடி போற்றவே,
ஈழத்து மாவீரர்களுக்குப் பாடும்
அஞ்சலி நேரத்தில் சொற்கள்
மவுனமடைகின்றன!

அறத்தை சிதைக்கும் அரக்கர் கூட்டம்
அகந்தை அழியும் நாளும் எட்டும்!

நாளைக் கனவுகளை
நாம் பாடலாம்;
நமக்கான தேசம் உருவாகலாம்!

ஒவ்வொரு சொல்லிலும் அன்பு இருக்கும்;
பாடல்தானே நிலைத்து நிற்கும்!

கவிஞர் கவி. சுகிரத்னம் (இர. தியாகராசன்), சென்னை

# ஆசான்

சிந்தனை பெருக்கி சிறப்பான வழியில்
வந்தனம் கூறியே வாழ்த்தும் உலகமே
வகுப்பறை சிறப்பாய் வளமாய் கற்பித்து
தொகுத்துக் கூறிடும் தொண்டின் நலனே

மாணவன் உறவை மாண்பாய் பெற்றே
இணைத்த அன்பாலே இனிதாய் தருவாரே
அன்பைப் பொழிந்தே அறவழியில் வாழ்ந்து
துன்பம் போக்கிய துடைப்பாளர் இவரே

இல்லார்க்கு தந்திடும் இனிய உள்ளமாய்
வெல்லும் விதமாய் வெற்றியும் காண்பாரே
கடமையின் உணர்வை கருத்தில் கொண்டே
திடமான வழியாய் திகழ்வாரே மண்ணில்

சுண்ணக் கட்டியால் சுழித்து கற்பித்தே
வண்ணக் கலைகளை வகுப்பாரே வகுப்பில்
வாழ்க்கை அனுபவத்தை வளமாய்ச் சொல்லி
தாழ்வு மனப்பான்மையை தவிர்க்கச் சொல்வாரே

வெற்றி பெற்றோரே வெல்லக்கட்டியாய் அணைத்து
தோற்ற மாணாக்கரையும் தேற்றுவாரே உயரே
சிற்பிக்குள் முத்தாய் சிறக்கும் கலைகளை
தேப்பமாய் சுழன்று திகழ்வாரே நித்தம்

குற்றம் செய்வோரின் குறைகளைக் களைந்து
ஏற்றம் காணவே ஏற்றுவார் ஏணியாய்
சமுதாய உணர்வில் சற்றுமே குறைவின்றி
தமக்கான வழியில் திடமான நடுநிலையாய்



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# காற்றோடு பட்டம்போல

சிறைபட்ட பறவை விடுபட்டதும்
திசையற்ற வானைத் தேடுகிறது

சிறிய நிறுத்தத்தில் இளைப்பாறி
வேகத்தடை தாண்டிக் குதித்து
பார்க்குமிடமெல்லாம் புன்னகை வீசி
மொட்டவிழும் மலரின் புன்னகை உரசி
சட்டென இடம்மாறி
சந்திக்கும் பூக்களிடம்
சிறு முத்தத்தைப் பரிசாகப் பெற்று
முற்றும் துறந்த துறவியைப்போல
மாறிவரும் மனோபாவமின்றி
சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்
சிறைவிட்டு புறப்பட்ட
சிட்டுக்குருவியின் துள்ளலோடு
பறக்கும் ஆசை இருந்தும்
பழக்க தோசத்தில் - மனம்
உன்னையே நினைத்து உழலுகிறது!

நீ அமர்ந்த பூங்காவின் இருக்கையில்
அதே புன்னகையோடு நிழலாய் மாறி
மனம் தவிப்பாறத் தொடங்குகிறது!

காற்றோடு பட்டம் போல
கரை கடந்து சென்ற நினைவை மறந்து
மனம் செக்கு மாடாய் உன்னையே எண்ணி
காதலோடு காத்திருக்கிறது
நீ வருவாய் என./



கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# நிலாவின் வாழ்க்கை வட்டம்


வானில் வெண்ணிலாவாய் — முழுமதி இன்று,
வீழ்ந்தது இருளின் பாரத்தில் — அடங்கிய ஒளியின மாயம்!
தீமை கூறாது தேம்பிய சிறகுகள் போல்
அழுகுரலாய் தேடி வந்தது — ஒரு கோர உணர்வு.

அருளை காண்கின்றாயா?
அந்த ஒளிக்கீற்று யாருக்காய் விழிக்கிறது எனும் கேள்வி,
மௌனத்திலே நின்று கத்தியது — மனதின் மடியில்.
நீண்ட நிழல்களில் சிக்கிக் கொண்டு,
நாம் மறந்தோம் எதனை தேடினோம்?

அத்தாட்சிகளை எண்ணிப் பார்த்தாயா?
சிந்தனையின் தூசியில் புதைந்துவிட்ட
ஒரு நேர்மையின் சுவடுகள் கிடைக்கின்றன,
உண்மையை உரைக்கும் ஒவ்வொரு நட்சத்திரமும்
உன்னைக் கேட்கும் — *உனது மனதின் பதிலை.*

கேலிக்கூத்தாய் புகைப்படங்கள் எடுப்பதைவிட,
கண்ணீரின் கதவுகள் திறக்கின்றன நிஜங்களை.
ஒரு முழு நிலவு காண்பிக்கிறது
மனத்தின் வெட்டுகளை — அழகு இல்லாத உண்மைகள்!

அந்த வெண்ணிலா நீயேனும்
அருள் என்ற ஒளியால் பிறரை வருடும் முன்
உன் உள்ளத்தை விளக்கேற்றுகிறாயா?
இன்று இருள் சூழ்ந்தாலும், நாளைய வழி
உன் விழிகளிலிருந்து தான் பிறக்கிறது.



கவிஞர் ரிஸ்னா அஸீஸ், அக்குறணை (இலங்கை)

# தோல்வியும் சுகமே

ஒருமுறை அல்ல
இருமுறை அல்ல
ஒவ்வொரு முறையும்
இதுதானே நடக்கின்றது
நீ வெற்றி பெறுவதும்
நான் தோற்றுப்போவதும்
சில நேரங்களில் எதிர்மாறாகவும்

சமமற்ற சமன்பாடுகள்
சரிசெய்யப்படாமலே
இன்றளவிலும் தொடர்கின்றதே

அதனாலென்ன
அன்பானவர்களிடம்
அதிகமுறை
தோற்றுப்போவதும்
ஒரு சுகம்தானே!



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# மேழியர்

விசும்பு பொய்த்துப் போக
பிழை யாகிப் போன பழனம்.
அகம் நொந்து வெம்பி
அவிந்து வீழும் மேழியர்.

நினைவுகள் நிறம் திரிய
நிலை மறந்த உறவுகள்.

வன்மம் விதைக்கும் வரம்பற்ற உயர்வு
வன்முறை பெருக வழிவிடும் பொன்..



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மகிழும் யானும்

மனம் யாவிலுமே
மகரந்தமாய் மிதக்கிறாய்
இதழ்நகும் புன்னகையில்
காவியங்கள் படைக்கிறாய்
உந்தன் பொன்முகம் கண்டதும்
புன்னகை உதிக்கிறது என்முகம்
மகிழ் நீ மகிழ்விக்கிறாய்
உந்தன் மழலைப் பேச்சால்!!
ஒவ்வொரு முறை நீ வரும்போதும்
இத்தனை நாட்களுக்குப் பின்னும்
மறவாமல் அதே அன்பில்
எனை பிணைப்பதில் மகிழ்வுறுகிறேன்
உன் புதிய சொற்களும்
பல ஆயிரம் கேள்விகளும்
ஆச்சரியத்தோடு காண்கிறேன்.
உனதன்பின் சாரலில் நனைந்திட
பேரின்பம் கொள்கிறேன்
விலைமதிப்பில்லா நேசம் நிறைந்து கிடக்க
இதே அன்பு இப்படியே தொடரட்டும்
எல்லையில்லா பேரன்பின் சிறுதுளி
போதும் உன்னிடம் இருந்து எனக்கு!



கவிஞர் ஜெ. சுதா, திருப்பூர்

மாணிக்க பரல்களின் மகிமையோ
மாதுளை பழங்களின் மதுரமோ
இப்பூச்சிரிப்பின் பூரிப்பு

பிஞ்சு விரல்களின் வருடலும்
பாத விரல்களின் நடனமும்
என்னேயொரு அழகு

தத்தி தத்தி தவழும் தங்க ரதமே
கொஞ்சி கொஞ்சி பேசும்
கொய்யா பழமே,
ஏங்க ஏங்க வைக்கும்
ஈடில்லா ரத்தினமே!

யான் பெற்ற பொன்மகனே!
நான் ரசிக்கும் மதிமுகமே
"எங்கள் வீட்டு வான்நிலா"




கவிஞர் டோனா. ஜி

# மௌனம்

இதயம் பேசிடும்
இனிமையான மொழி!
வெளிப்படும் பல நேரங்களில்
பலவிதமாய்!
இக்கட்டான சூழ்நிலைகளிலும்
பல இன்னல்களைத் தடுத்திடும்!
காலம் கடந்திடும் மௌனம்
சிதைத்திடும் நம் நிம்மதியை!
தனிமையில் மௌனம்
பல நினைவுகளைத் தந்திடும் !
உறவுகளில் காத்திடும்
மௌனம் தன்னடக்கம் !
காலம் தந்த அனுபவ பாடம்
மௌனம் !



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

புத்தகம் படிக்க, படிக்க, நித்தம், நித்தம் சுகமே!
இது புத்தகத் திருவிழா மட்டுமல்ல
புதுப்புனலை கொண்டு வந்த விழா.
புது புனலை கொண்டு வந்த விழா மட்டுமல்ல,
புதினங்களை அள்ளித் தரும் விழா.
புதினங்களை அள்ளித்தரும் விழா மட்டுமல்ல,
முக்கனியின் சுவையை அறியும் விழா.
முக்கனியின் சுவையை மட்டும் அறியும் விழா அல்ல,
மூத்தோரின் வழிகாட்டும் ஆன்ம விழா.
மூத்தோரின் ஆன்ம விழா மட்டுமல்ல
ஆன்ம ஜோதியாய் அறிவை வளர்க்கும் விழா.
தேனை சுவைத்தால்தான் இனிமை தரும்
அதுபோல புத்தகத்தை படித்தால் மட்டுமே
அறிவு, தெளிவு, ஞானம், புத்தி கூர்மை ஏற்படும்.
தினமும் அரை மணி நேரம் ஆவது
புத்தகம் படிப்பதற்கு செலவிடுவோமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காலம் மாறும் கனவு நிஜமாகும்



அன்பு நட்பு பாசமெல்லாம் வேசமாகி போச்சு
அண்ணன் தங்கை உறவெல்லாம் காசுதானு ஆச்சி

உண்மை உழைப்பு நேர்மை எல்லாம் நீர்த்துதான் போச்சு
படித்த படிப்பு அத்தனையும் பாழாகி போச்சு

படித்தவனுக்கு வேலை என நினைத்த காலம் போச்சு
பணம் படைத்த மனிதனே புனிதன் என போற்றும் காலமாச்சி

சமூக சிந்தனையெல்லாம் கானல் நீர் போல் ஆச்சி
கற்பு போலே நட்பு எல்லாம் கொண்டாடிய
காலம் எல்லாம் மலையேறி போச்சு

அந்த கால பொன் வாழ்வாய் உறவு போற்றி
உயிர் வளர்த்த உன்னதமான காலமும்
பூவாய் மலரும் நாளும்தான் என்னாலோ

திருவிழா பண்டிகையென ஊர்கூடி தேர் இழுத்து
கொண்டாடி மகிழ்ந்திட்ட அந்த நாள் வாழ்வுதான்
மனமெல்லாம் மகிழ்ச்சிதான்.

காலமும் மாறிடும் கனவும் பளித்திடும்
மனமெல்லாம் மத்தாப்பாய் மகிழ்ச்சி பொங்கிடும்!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# என்னுள் உயிராய் நீ (முதுமைக் காதல்)

பாவகை : வெண்கலிப்பா



அரும்பிட்ட காதலெல்லாம்
ஆகாதெ னழித்திட்டேன்
விரும்பியவர் காதலையும்
வேண்டாம்னு விலகிட்டேன்

பெண்பார்க்கும் படலத்தை
பிடிப்பற்று விடுத்திட்டேன்
வேண்டான்னு யுரைத்திட்டால்
வேரிழுக்கு ஏதென்று..

உடல்தகுதி மிகைப்படுத்தி
உதாசீனப் படுத்திட்டால்
படர்கின்ற இன்னல்கள்
பாவியுள்ளம் பொருக்காதே .!

புலர்கின்ற பொழுதெல்லாம்
புலம்பித்தான் தவிக்கிறதே
உலர்ந்திட்ட இளமையும்தான்
ஊளையிடும் நரியாக ..!

இளமையிலே வந்திடாத
இனிதான காதலும்தான்
வளமையுடன் முதுமையிலே
வனப்புறவே வந்திட்டால்

தனிமையிலே தனலாகி
தகதகக்கும் இளமையுமே
பனித்துளியின் மலர்வனமாய்
பதுமையுள்ளம் குளிர்ந்திடுமே

விண்ணகத்தை விலைபேசி
வீடொன்று கட்டிடுவேன்
திண்ணமுடன் வாழ்ந்திடவே
தேன்சிட்டாய் பறந்திடுவேன்

ஆலையிட்ட கரும்பாக
ஆட்டுகின்ற எம்மனதும்
பாலையிட்ட தென்னையாக
பரவசமும் எய்திடுமே

மனமறிந்து மன்னவனும்
மகிழ்வினையும் தந்திட்டால்
தினமலரும் புதுமலரின்
தேன்கூடாய் நானாவேன்

வனமான வாழ்வகன்று
வண்ணச்சோ லையாகும்
கனமான உள்ளமுமே
காற்றாகி பறந்திடுமே

ஆதாரம் இல்லாமல்
அல்லலுரும் முதுமையிலே
ஆதாரம் தந்தென்னை
அரவணைக்கும் துணையிருந்தால்

சேதாரம் இல்லாமல்
செகத்தினிலே வலம்வருவேன்
பாதாதி கேசமென பணிந்து!

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

# என்னம்மையே!


உடைபடும் போதெல்லாம்
உன்னருவத்தை தேடும் மனம்
அடக்கிக் கொள் என்றாலும்
ஆங்காரம் தலைதூக்கி தொலைகிறது

என்செய்வேன் என்னம்மையே
பொறுத்தாள்வது தூரங்களை கடந்தா
மதிக்காத மனங்களை தள்ளிவைப்பதிலா
என்னம்மையே

உதாசீனம் சற்றே
எரிமலைக்குள் தள்ளுகிறதே
உறுமலை மௌனமாய் கடந்திட
என்ன செய்ய என்னம்மையே

சாந்தி சாந்தியன்று
மனம் தியானிக்கையில்
ரௌத்திரம் பழகென்ற
வார்த்தையை கடப்பதும்
எளிதல்லாது போகுதே

மௌனத்தை சுவைத்து
மௌனத்தில் அமர்ந்து
மௌனத்திலே மனதை இருத்த
வழிசெய் அம்மையே



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)



பற்றற்று விளக்கும்
மனிதனுக்கு பற்றுவைக்க

விளக்கு ஒன்று
வாழ்வின் ஒளிச்சமாக

அனிச்சமாக
என் வாழ்வில் நுழைந்த

தீப ஒளி அவனி(ளி)ன்
பார்வை

பார்வை ஒளியில்
என் வாழ்வை வென்றேன் என்று
யாரும் அறியார்.!

கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

நினைவினுள் பதியும் பாதச்சுவடுகளை என்ன
செய்தால் அழியும். கல்வெட்டாய்
பதிவானதே எப்படி?

கால்நனைத்த ஈரலிப்பைப்போலவே
கூடுதலாய் நனைகிறது  கன்னம்
சின்ம் அமைத்தது யாரோ?

செவ்வென என இருந்துக்கொண்ட
மனதினுள் பாசத்தை விதைக்க விட்டு
கருவருத்தது யாரோ?

முற்களை செருக
வார்த்தை அம்பினால் துளையிட்டால்
என்ன செய்வதோ
அறுத்தெரியும் வழிதான் என்னவோ?

தூரம் போகாத போதும்
துரத்தியடிக்கும் வலிநிறை வார்த்தைகளை
கடந்து வரவே நினைத்தால்
சொன்னவையெல்லாம்
காதோரம் கிசுகிசுப்பாய் கேட்கிறது.

பாசமான உறவுகளுக்குதான் கண்டது
பற்களின் ஈருகளும் தெரிய சிரிக்க முடியும்
வெந்த புண் தானே துளையிட்டு  நோவெடுக்கும்.

கோடிமலர் கொட்டியதைப்போல பூப்போல பூரித்து
அழகாக தெரியும் மனதும்
வலிக்கும் வாய்ப்பில் என்ன தான் செய்யும்
கசந்த முறுவலோடு விலகுவதைத்தவிர.



கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# நிஜமான செல்வம்

அன்பிற்கு ஏங்கும் உறவுகள்
ஒரு பக்கம்
அளவின்றி குவிந்து கிடக்கும்
செல்வம் ஒரு பக்கமென
தராசில் இட்டு அளந்தாலும்
அன்புள்ள உறவுகளின் எடை குறைவே.
உயிறற்ற பணம்,நகை,
செல்வத்தின் எடையே மிக அதிகம்.

உலோகத்தின் கவர்ச்சியால்
தூய்மையான அன்பு கூட
விலகி நிற்க வேண்டிய நிர்ப்பந்தம்.
ஏன் இந்த நிலை
உணர்வுகளற்ற அச்செல்வத்திற்கு
ஏன் இவ்வளவு மதிப்பு.

உறவுகளை தாழ்த்தியும்
செல்வத்தை உயர்த்தியும்
பார்ப்பதே இங்கு பலரின் வழக்கம்.

இடை நிறுக்கும் தராசு போல்
பலரின் இதயங்களில் கனமாய்
தெரிவது உறவுகளல்ல செல்வம் தான்.

மின்னும் உலோகத்தால் நிரப்பப்பட்ட
விழிகள் ஒரு நாள் உண்மையான உறவு
விலகும்போது, தான் அவ்வுறவின்
அன்பை உணர முற்படும்.

பணத்தால் வீட்டை செல்வத்தை
வசதியை வாங்கலாம்
சிந்தனையின்றிய நிம்மதியான
தூக்கத்தை வாங்க முடியுமா?



பணம் நகைகள் பல இருக்கலாம்
நமக்கென உண்மையான அன்போடு
ஒரு துளி கண்ணீர் சிந்தும்
உறவொன்றை செல்வத்தால் வாங்க முடியுமா?

உள்ளத்தின் கதவடைத்து
மாளிகை வாசலிலே நிழல் தேடுகையில்
உள்ளத்தின் கதவை தட்டியே
களைப்படையும் உன்னத உறவு
பொன் கொடுத்தும் கிடைக்காத ஒற்றை வரம் அது.

நம் இருப்பு மறைந்த பின்னும் கல்லறையிலேனும்
நமக்கென அழும் கண்ணீர்த் துளியே
வாழ்க்கையில் மிஞ்சும் நிஜமான செல்வம்!

கவிஞர் ரீஸ்னா ரமீஸான், அக்குறணை, கண்டி

கரும்பலகையில் எழுதி அழிக்க
முடிந்த வார்த்தைகளாய்!
வாழ்க்கையின் வலி நிறைந்த
பக்கங்களை துடைத்து எறிந்தால்!

நினைவென்னும் கரும்பலகையில்
நீங்காமல் நீந்தி வரும்
எண்ணங்கள் வண்ணங்களாய் மாறி
வாழ்வை நிறைத்திடுமே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# நிழலான வாழ்வு!

உலகின் ஓட்டத்தில் மறைகின்றன
உயிர்கள் நம்மில் உருவாக்கின
வழித்தடங்களும் நினைவலைகளும்!

எங்கே பயணித்தோம்
என்ன தேடினோம் என்றறியுமுன்னே
மண்ணாகிறோம் மண்ணுலகில் நாமும்!

கணிக்குமுன்னே கண்ணிமைக்கும்
மணித்துளிகளில் கடக்கின்றன காலங்கள்
கற்றுக்கொள் சுகித்திருக்க - உன்
பிரயாசத்தின் பலனை!0

சந்ததிகள் சுழற்சியாய் இவ்வுலகில்
களித்ததென்ன புதிதாய் இம்மண்ணில்
எல்லாம் இப்பிரபஞ்ச மாயை - நீ
அறிந்திரு இதனை!

மகிழ்ந்திருப்போம் நம்மில்
உதவியாயிருப்போம் பிறர்க்கு - நாம்
உயிர் வாழுமட்டும் இம்மண்ணில்!
உணர்ந்திருப்போம் நம்மில் - நாம்
திரும்புவதில்லை மீண்டும் இம்மண்ணுக்கு!

நியமித்தது மாறாதே இறைவனால்
நாம் அவருக்கு அடங்கியிருக்க!
நிழல் போன்ற மாயவாழ்வில்
நம் பின்சந்ததி - இவ்வுலகில்
என்னாகும் என்றறியோமே!

வாழ்வும் தாழ்வும் பக்குவம் தருமே
மாயையான நாட்கள் மறையுமுன்னே
மகிழ்கொள் மனமே - இந்நிழல் வாழ்வினில்!



கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# ஞானம்


வெட்ட வெளி பொட்டலில்
இருளின் சூட்சும மறைவில்
பசுமை இறகுகளின் துகள்களில்
விடியும் ஒவ்வொரு பகல்களில்
காடு மேடு மலைகளில்
தாவிச் செல்லும் அலைகளில்
குறுகிய குகைகளில்
நீண்ட பயணங்களில்
கண் திறந்து
தேடப்படும் சக்தி
கண் மூடி
ஒளிந்து கொண்டிருக்கிறது
அகத்தில்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு


# அந்திநேரச் செவ்வானம்

காலமெனும் கால்பந்தாட்ட வீரனவன் உதைக்க
மேல்திசை வலையினில் வீழ்கின்றான் கதிரவனும்!
காலக் கணக்கில் எண்ணிக்கை கூடுகையில்
எல்லோரின் வாழ்வினிலும் நாளொன்று குறைகிறதே!
மேல்திசையில் கதிரவனை வரவேற்க ரங்கோலி!
பலவண்ண நிறம்காட்டி மகிழ்விக்கும் வான்வெளியும்!
அந்திமஞ்சள் பூசியதால் அழகுமிகும் வானம்!
எந்திரமாய் உழைப்பவர்கள் இளைப்பாறும் காலம்!
மதிமயக்கும் மணம்பரப்பி மலர்கின்ற மலர்கள்பல!
ஆதவனால் உண்டான வெப்பத்தைக் குளிர்விக்க
உதித்திடும் திங்கள் தண்ணொளி பரப்பிடுமே!
மனங்குளிர வீசும் தென்றலினில் சுகவாசம்!
இணைதேடிக் குயிலினகள் இசைபாடும் நேரம்!
தினந்தோறும் சந்தித்து மகிழ்கின்ற காதலர்கள்
மனமயங்கி மடிதனிலே சாய்ந்திருக்கும் காலம்!
விளையாடும் சிறுவர்களின் கூச்சல்கள் வீதிகளில்!
கால்நடைகள் திரும்புகையில் உண்டாகும் புழுதிப்புயல்!
தோற்றமும் மறைவும் மாற்றமில்லாதது என்றுணர்த்த
எற்றைக்கும் வானம் எடுத்துரைக்கும் பாடம்!
நேற்றிருந்தோர் இன்றில்லை என்பதே நிலையாமை!
நாளை நமதென்று நம்புவோர்க்கு புது விடியல்!
காலத்தை வீணாக்கி சோம்பித் திரிவோர்க்கு
ஞாலத்தில் எஞ்ஞான்றும் நற்பெயர் இருப்பதில்லை!
திரும்புவது நிலையில்லை என்றாலும் புள்ளினங்கள்
இருப்பதில்லை கூட்டிற்குள்! இரைதேடிப் பறந்து
திரும்பிடும் கூட்டிற்கு கதிர்மறையும் மாலையிலே!
குன்றாத கடல்வளத்தால் வலைஞர்களை வாழ்விக்கும்
பொங்கும் கடலோசை புத்துணர்வு அளித்திடுமே!
நன்றே ஆற்ற நாள்தோறும் திட்டமிட
அந்திநேரச் செவ்வானம் அளித்திடும் அவகாசம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

அகர முதல இலக்கியப் பேரவை



வெண்மதியே என்றன்
வெகுமதியாய் வந்தாயே

மண்ணில் துளிர்த்த
மலராக மலர்ந்தாயே
கண்ணில் பட்டு
கலந்து விட்டாயே

விண்ணில் மின்னி
விருப்பம் கொடுத்தாயே
வெண்மதியே என்றன்
வெகுமதியாய் வந்தாயே

தீண்டும் மையலைத்
தித்திக்கத் தந்தாயே
வண்டாகி அமர்ந்து
இம்சைகள் செய்தாயே

கண்ட நாள்முதல்
கதிராய் முளைத்தாயே
வண்டமிழாய் இனித்து
வரிபோல பிணைந்தாயே

கொண்ட. அன்பில்
கொள்ளை இட்டாயே
எண்ணத்தில் எப்போதும்
என்னுள் நீயே

வண்ணா அழகில்
வார்த்த சிலையே
உயிரோடு கலந்த
உயிரான என்னுயிரே

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

## இல்லை என்றே

வெளிப்படுத்தாத 'திறமையும்'
காட்டபடாத 'பாசமும்'
செய்யப்படாத 'உதவியும்'
கேட்கப்படாத 'கேள்வியும்"
சொல்லப்படாத 'பதிலும்"
எழுதப்படாத 'எழுத்தும்'

இவைகள் இருந்தாலும்
இல்லேயென்றே அர்த்தப்படும்.

*******



## இப்படியா அப்படியா

முடிவுக்குப் பின்னான
தோல்வியில்

இந்த இடையூறால்
அந்த ஒத்துழைப்பின்மையால்
அவரின் தவறால்
என தன்னைத்தானே
சமாதானப்படுத்த
காரணங்களை
அடுக்குபவரா?

காரணம் என்ன
யோசிப்பு கவனக்குறைவு
ஒரு காரணம்
முன் யோசனை இல்லாமை
ஒரு காரணம்
செயல்பணியில்
சூழ்நிலையை எதிர்கொள்ளாமை
ஒருகாரணம்
இறுதி நம்பிக்கை கொள்ளாமை
மற்றொரு காரணமென
நிஜம் நிஜமாய்
உள்விசாரணையில்
மனசாட்சி சொல்வதை
கேட்பவரா?

இறந்த பறவையின் சிறகுகளை
என்ன வீசினாலும்
பறக்க மறுக்கிறது
***

பறவையின் ஆன்மா
பறக்குமா ? நடக்குமா ?
***

மரங்களின் குறிப்பிட்ட கிளைகளை
கரம் போல் பற்றிக்கொள்ளும்
பறவைகள்
***

பறவை நடந்தால் அழகு
அமர்ந்தால் பேரழகு
பறந்தால் சொல்ல வார்த்தையில்லை
***

குழாய் திறந்தவுடன்
குடிநீர் என்பதெல்லாம்
சொர்க்கவாசல்
***

வெளியில் சென்று கழிக்க அதட்டினாள் அம்மா
வெளியே சென்று உள்ளாடை கலையாமல்
அமர்ந்ததாம் அந்த குழந்தை
***

மூக்கு சளி பாப்பா
படம் பிடிக்க
பக்காவான பொருள்
***

நீர் வடிய நிறுத்தப்பட்டிருக்கும்
குடை போல
என்னை அவள் மன வாசலில் நிறுத்தி வைத்தாள்
***



மழை என்று சொன்னாலே
மனம் குளிர்வடைகிறது
***

அழியா
கிருமி
நெகிழி
***

ரப்பர் செய்ய தேவையான பொருட்கள்
பென்சில் துருவல் சாதம் வடித்த கஞ்சி
90s அலப்பறைகள்
***

அன்பை நிராகரிக்காதே
ஒரு அளவிற்கு மேல்
அது ஆபத்தாக மாறிவிடும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# கறிவேப்பிலை கொத்துமல்லி



கறிவேப்பிலை கொத்துமல்லி
கமகமக்கும் வாசம்
கடைசியாகச் சேர்க்கையில்
உணவோ ஊரை விலை பேசும்!
உப்பு, புளி, காரம்
உறையுமிடத்தின் சாரம்
அத்தனையும் தாண்டி
அலங்காரத்துடன் முந்தி
நுகரும் வழி காட்டும்
சுவைக்கச் சொல்லி அழைக்கும்!

அழகுக்காகச் சிலரும்
அருமை புரிந்து பலரும்
விரும்பி உண்ணும் சிலரும்
உறுதியாக உண்பார்!
போடச் சொல்லும் பலரோ
ஒதுக்கி ஓரம் வைப்பார்!
முடிவில் சேர்த்து மெல்லுவார்!

இன்னும் ஒரு குணமுண்டு!
இருக்கும் வட்டில் இருந்து
எடுத்து வைப்பார் வெளியிலே
வைக்கக்கூட விரும்பிடார்
சிக்கும் பற்கள் இடையிலே
சிங்கப் பல்லார் மெல்லவே!
கிலோ கணக்கில் காய்கறி
கணக்குக் கூட்டி முடிக்கையில்
இதோ என்று தருவார்
எங்கள் ஊர் அண்ணாச்சி!

அடுக்குமாடி கட்டிடத்தில்
அடுக்கி வைத்த பொருட்களுடன்
கட்டி வைத்த கருவேப்பிலை
கொத்தோடு மல்லித்தழை
விலை அட்டையைக் கண்டிப்பாகக்
கட்டி வைப்பார் அங்காடியில்!



இரண்டு இலக்க எண்ணிலே
இதற்குக்கூட விலையா?
எடுத்துவைத்ததை திருப்பி
எடுத்தவிடத்திலா வைப்பார்?
கசங்கிக்கொண்டே வாங்குவார்
கஞ்சத்தனத்தில் இருப்போர்!
'அதனைக் கொடுக்க மனமில்லை!'
அலுத்துக்கொண்டு நடப்பார்!


சிலரோ வாழ்க்கைப் பயணத்தில்
சில்லரைத்தனமாய் இருப்பார்!
அடுத்தவரை தனக்கெனவே
அவருழைக்க வைப்பார்!
அடுத்தடுத்த வேலைகள்
முடித்துக் கொடுத்த மனிதனை
ஒதுக்கி ஓரம் தள்ளுவார்!
அவர் நினைப்பது மனிதனை
அப்போதைக்குத் தேவையில்லை!
மனிதம் இல்லா உயர்திணை
உயர்மனிதத்தனத்தினை
உதறியதால் அஃறிணை!

எடுத்துக்காட்டுச் சொல்லிட எப்போதுமே
கருவேப்பிலை, கொத்துமல்லி!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

## வாசிப்பு அனுபவம்

*நூல்- என் கனவுகள் உன் காலடியில்* - இரஜகை நிலவன்




நூல் ஆசிரியரால் அன்போடு அனுப்பப்பட்ட புத்தகம். பல வண்ண பூக்களுடன் திகழும் பூஞ்சோலை போல, தமிழன்மையின் காலடியில் தமிழ் மொழியின் தொன்மை, தாய்மை, பெருமையை கட்டுரைகளாக சமர்ப்பித்திருக்கிறார்.

நூலிலிருந்து

எளிதாக பேசும் மொழி, தமிழ் பாப்பா, மூச்சிழுக்கும் வல்லொலி அதில் இல்லை பாப்பா,பேசு பாப்பா
தமிழ் பேசு பாப்பா -பாவாணர் இந்த வரிகளை எழுதி நூறு ஆண்டுகள் நிறைவடைய போகின்றன. இன்றும் இந்த வரிகள் அவசியமானதாக உள்ளது.

தமிழின் கட்டுகளை உடைத்து மொழியை எளிமைப்படுத்திய இயக்கமே தனித்தமிழ் இயக்கம். பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகள், உவேசா, சீனிவாசா ஐயங்கார், வி ஆர் ராமச்சந்திர தீட்சிதர், வள்ளலார், என நீளும் தமிழ்ச் சான்றோர்களே தமிழை எளிமைப்படுத்தியவர்கள்.

தாழ்ந்தோர் சிறிதும் தலையெடா வண்ணம் அவர்களை அமிழ்த்திக் கொல்லுகின்ற அநியாய கொள்கைகளும், சரித்திர புளுகுகளும், குலப் புரட்டுகளும், மந்திர தந்திர ஏமாற்றங்களும், மலிந்துள்ள இதிகாச புராணக் குப்பைகளே இந்தியில் உள்ளன.

ஆகையால் இந்திய பொது மொழியாயும், உலகப் பொது மொழியாகியும் இருக்கின்ற ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை ஏற்படுத்தல், கோளறியை நீக்கிவிட்டு குள்ளநரியை இழுத்து விடுவதையே ஒக்கும்.

திரு சீனி சந்திரசேகரன்

வாசிப்பு அனுபவம்

## வான் சிறப்பு

நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படித்தான் உங்களை சுற்றியுள்ள இயற்கை சூழல் இருக்கும் அல்லது உங்களை சுற்றி உள்ள இயற்கை சூழல் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் உங்கள் வாழ்வு இருக்கும்.
இயற்கைக்கும் உங்களுக்கும் உள்ள தொப்புள்கொடி உறவு அது.

ஆண்டவன் சொன்னாலும் ஆதவன் வந்தால் தான் அது விடியல்.
மயக்க நிலை எதுவென்றாலும் மேகம் கருத்தால் தான் அது பொழிதல்..
மழையே வாழ்வாதாரம். மழை இல்லை என்றால் மானிடமில்லை.

## காலடியில் என் கனாக்கள்

நம்மில் பலரும் ஒரே நாளில் தலைவனாகி விட கனவு கோட்டைகள் கட்டி, கற்பனைச் சிறகு விரித்து, குதிரைகளில் கானல் நீர் பவனி வருகிறோம்.
நம் கனவுகள் நிஜங்களை தேடி போவதில்லை, வெறும் வண்ணத்திரை கனவுகளாகவும், கானல் நீர் வேட்கைகளாகவும், வானவில் நிறபிரிப்பின் வண்ண கனவுகளே நம் நினைவில் பைக்குள் நிரந்தரமாக தங்கி விடுகிறது. அதை தாண்டி உண்மையை சொல்ல, நிஜத்துக்குள் நுழைய மனம் சண்டி குதிரை ஆகிப் படுத்துக் கொள்வது நிதர்சனமான உண்மை.

## சித்தர் இலக்கியங்கள்

சாதியை எதிர்ப்பு, சமய சடங்குகள் எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, பெரும்பாலான சித்தர்களுடன் மேற்கூறிய மரபு காணப்படுகிறது.

சித்தர்கள் வைதீக சமயத்திற்கு எதிராகவும் அவர்களின் வழிபாட்டு முறைகளுக்கு எதிராகவும் மிகக் கடுமையாக குரல் கொடுத்தவர்கள்.
சாதியாவதேதடா சாதி பேதம் பேசும் தன்மை என்ன தன்மையோ என சமூக நீதிக்காக குரல் கொடுத்தவர் சிவவாக்கியர்.

திரு சீனி சந்திரசேகரன்

## வாசிப்பு அனுபவம்

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் என பாம்பாட்டி சித்தர். ஜாதி பேதம் இல்லை என்ற பல சாதி யாவும் ஒன்றென்று அறிந்தே உணர்ந்து உறவோதி என கடுவெளிசௌசித்தரும் சாதி பேதங்கள் சொல்கின்றீர் என்று கொங்கணரும்பாடல் தொடங்குகின்றனர்.

### தீவிரவாதம் தேவையா

தீவிரவாதத்தை அழிக்க முற்படும்போது மதத்தின் பெயராலும், இனத்தின் பெயராலும், மக்களை திசை திருப்புவது பெரிய துரதிர்ஷ்டம். இதில் மக்களும் சிந்தித்து, சீர்தூக்கி பார்க்காமல் ஆட்டு மந்தையைப் போல ஒரு தலைவன் சொல்லி விட்டான் என்பதற்காக தயங்காமல் போரிடுவது சில வேலைகளில் ஆச்சரியமாகவே தெரிகிறது. எந்த ஒரு காரியத்திற்கும் நியாயங்களை கற்பிக்க முடியும். ஆனால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை பற்றி கவலைப்படாமல், தங்களுடைய சிந்தனைகளை செயல்படுத்த நினைக்கும் போது, அந்த சிந்தனையை நிறைவேற்ற ஒன்றும் அறியாதவர்கள் ஈடுபடுத்தி எதிர்ப்பு சக்திகளை ஏற்படுத்திக் கொள்ள முயலும் போது, அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். உலகெங்கும் பசி பட்டினியால் துடிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு கொண்டு செல்வதில், எங்கெல்லாம் சீர்கேடான அமைப்புகள் சிதறிக்கிடக்கின்றனோவோ அவைகளின் சீரமைப்பதில், தீவிரவாதம் வேண்டும்.

### அழகு என்பது

இன்றைய உலகில் அழகு என்ற சொல் கூட ஆரோக்கியத்தை தாண்டி யோசிப்பதாக இருக்கிறது. உடல் ஆரோக்கியம் கூட இரண்டாம் பட்சமாக போய்விடுகிறது. வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அடிப்படையே நம் குறிக்கோளில் அடங்கி இருக்கிறது. உபயோகப்படுத்தாத மூளையும், இயங்காத இயந்திரமும், உருக்காத இரும்பும், துருப்பிடித்துப் போகும்.

திரு சீனி சந்திரசேகரன்

வாசிப்பு அனுபவம்


எந்த பொருளுமே உபயோகப்படும் போது தான் அதனுடைய பயனை உணர முடியும்.

நேர்கொண்ட நோக்கும், நேர்மை போற்றும் போக்கும், ஆக்க சிந்தனையும், வழங்குவதில் குறை வைக்கவில்லை இந்த நூல்.




திரு சீனி சந்திரசேகரன்

## வாசிப்பு அனுபவம்




மீனா சுந்தர் ; சிறுகதைத்தொகுப்பு
முதல் பதிப்பு நவம்பர் 2024
வெளியீடு யாப்பு வெளியீடு
பக்கம் 196 ; விலை ரூபாய் 200

புறத்திலும் அறத்தை பேசும் புதிய எழுத்து சித்திரங்கள்

கவிதை நூல்கள் சிறுகதைத் தொகுப்புகள் கட்டுரை நூல்கள் என பல படைப்புகளை வெளியிட்டிருக்கும் மீனா சுந்தர் பழனி கல்லூரியில் தமிழ்த்துறை பேராசிரியராக பணிபுரிபவர்.
இவரது பல்வேறு படைப்புகள் பள்ளி கல்லூரி பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன. பல இதழ்களில் பரிசுகள் பெற்ற தனது சிறுகதைகளைத் தொகுத்து மஞ்சள் புரவிக்கு முத்தமிட்டவன் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டு இருக்கிறார்.

இதில் அவரது முன்னுரை மிக அருமையானதொரு காலத்தின் அவசியத்தையும் சிறுகதைகளின் முக்கியத்துவத்தையும் தெளிவாக உணர்த்துகின்றது. இந்த நூலில் உள்ள 14 சிறுகதைகளும் பழனியும் அதைச் சுற்றி உள்ள இடங்களையும் மையமாக வைத்தும் எளிய மனிதர்களின் வாழ்வியலையும் பேசுகின்றன.

கருத்தை வாசிப்பவரின் மனதிற்குள் நுழைத்திடும் ஓட்டமும் கால நிர்ணயத்திற்குள் எண்ணத்தை இதயத்தில் பரப்பி விட வேண்டிய அவசியமும் சிறுகதையின் மையப்போக்காக இருந்து நம்மை எளிதில் வசியப்படுத்தி விடுகிறது. ஆழ்கடலின் மௌனத்தை தனக்குள் புதைத்துக் கொண்டு அவ்வப்போது ஓசையிடும் சங்கினைப் போல் சிறுகதைகள் மனங்களின் ஆழத்தில் புதைந்து விட்ட போதும் இடைவிடாது சிந்தனையின்

கவிஞர் இளையவன் சிவா

## வாசிப்பு அனுபவம்

ஓட்டத்தில் இடையூறென வந்துவந்து போகக்கூடும். சொல்ல முடியாத, சொல்லத் தயங்கிய பல்வேறு தளங்களையும் சிறுகதை கொட்டித் தீர்த்து விடுகிறது, எட்டிப் பிடித்து இளைப்பாறிக் கொள்கிறது.

நாவலின் நீளமும் தொடர்ச்சியற்ற வாசிப்பாக மாறிப்போன காலத்தின் அவசரமும் சிறுகதையின் வடிவத்திற்குள் சீக்கிரமே கட்டுண்டு விடுகிறது. உடைத்துப் பேசி ஊரறிய வைத்து ரகசியத்தையும் பரப்பிவிடும் மொழிக்குள் சிறுகதை முதலிடம் பெற்று பவனி வருகிறது. இலக்கிய வகைகளில் அதிகம் பேரின் கவனத்தை ஈர்த்து காந்தமென எண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும் பேராற்றல் சிறுகதைகளுக்கு உண்டு. சிறுகதைகளில் நுழையும் மனம் சில நிமிடங்களுக்குள் கதைக்குள் தம்மை கரைத்துக் கொள்கிறது. களத்தை தனக்கானதாக ஏற்றுக்கொண்டு உணர்ச்சிகளுக்குள் தன்னையே உலவவிடுகிறது. தொடர்ச்சியான அறிவுரைகள் வற்புறுத்தல்களாகி வசவுகளைப் பெற்றிடாமலும் ஓயாத குறை கூறலும் சுய தம்பட்டமும் உள்ளுக்குள் எரிச்சல் எரிமலையை வெடிக்க வைக்காமலும் கதையின் போக்கில் தன்னை உணர வைக்கும் சிறுகதைகளே கால ஓட்டத்தில் நில்லாது ஓடி நிலைத்து நிற்கும். அத்தகு சிறுகதைகளின் தொகுப்பாகவே மஞ்சள் புரவிக்கு முத்தமிட்டவன் நூல் இலக்கிய வெளியில் எழுந்து நிற்கிறது.

அடுக்கிக் கொண்டே போகும் முடிச்சுகளிலோ தொடர்ச்சியாக விவரிக்கும் சூழலிலோ கதையின் கரு கலையாமல் நமக்குள் கருத்தை பதிவிடும்படியான அறமும், புறத்தை கவனிக்கும் நேசமும், சமூகத்தில் புரையோடிப் போன பிரச்சனைப் புண்களின் மீதான கருணையும், சக மனிதனை மதிப்பதில் காட்டும் சமத்துவ பார்வையும் இச்சிறுகதைத் தொகுப்பில் நிறைந்து மலர்கின்றன, மலர்ந்து நிறைகின்றன.

சிறுகதைக்கான இலக்கணத்தை கற்றுத்தரும் இவற்றின் வழியே நாம் வாசிக்க முடிந்தாலே நமக்கான பாதையை கண்டு கொள்ள முடியும். மேல் தட்டு வர்க்கத்தின் பகட்டுகளையோ பட்டில் பளபளக்கும் நாகரீகச் சந்தைகளையோ

## வாசிப்பு அனுபவம்



சிந்தையில் கொள்ளாமல் வறுமைக் கோட்டினை வரையத் தெரியாமலே விழுந்து கிடக்கும் சராசரிக்குக் கீழான மனிதர்களின் வாழ்க்கைப்பாடுகளையும் நம்மைச் சுற்றி நடக்கும் சமூக சிக்கல்களுக்குள் சிக்கித் திணறும் சாதாரண மனிதனின் நகர்வுகளையும் இச்சிறுகதைகள் படம் பிடிக்கின்றன.

வாசகனின் கவனத்திற்கு கொண்டு சென்று இதுதான் சிக்கல் என்பது சொல்லிவிட்டு தீர்வை நீங்களே அமைத்துக் கொள்ளுங்கள் என்ற சிந்தனை கொள்ளும் சில எழுத்தாளர்களின் சிறுகதைகள் உதித்து விடுகின்றன. ஆம். உண்மையில் ஒருவரின் வாழ்விற்கு இது தான் முடிவுரை என்று யாரால் எழுதி முற்றுப்புள்ளி வைத்து விட முடியும்? தன் அளவிலான தீர்வு இதுதான் என்று சிறுகதைகள் முடிவுகளைக் கொடுத்தாலும் இன்னும் அடுத்ததை நோக்கி நகர்ந்திட முடியாதா என்ற ஏக்கத்தையும் வாசகனுக்குள் ஏற்படுத்தக் கூடும் ஆற்றல் சிறுகதைகளுக்கு உண்டு. இத்தொகுப்பும் அதைப் போன்ற கதைகளை விவரித்து நல்லதொரு தீர்வுகளைக் கூறினாலும் அவற்றையும் தாண்டி சமூகத்தின் போக்கின் மீதான நமது கவனக்குவிப்பை கூர்மைப்படுத்தத் தூண்டி விடுகின்றன.

அறிவியல் வளர்ச்சி அடுத்த கிரகத்தில் கூடு கட்ட நம்மை அழைத்துச் செல்லும் இன்றைய தொழில்நுட்ப யுகத்திலும் காலம் காலமாய் புரையோடிப் போன தீண்டாமைத்தனமும் பெண் அடிமைத்தனமும் மனிதனை மனிதனாக மதிக்காத ஆணவப் போக்கும் குடும்பத்திற்குள் பெண்களுக்கான உரிமையும் பொறுப்பும் இன்னும் வழங்கப்படாமையும் அடுத்தவரின் சொத்தை அடித்துப் பிடுங்கி வாயெனும் உலைக்குள் போட்டுக் கொள்ளும் முதலாளித்துவ மனப்பாங்கும் அரசின் திட்டங்களை அடிமட்டத் தொண்டனுக்கும் கொண்டு சேர்த்தலை உறுதி செய்யாது கையூட்டிலும் கவனக்குறைவிலும் அனைத்தையும் சுரண்டிப் பிழைக்கும் குள்ளநரிக் கூட்ட அரசியல்வாதிகளும் உலவிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

இயற்கை அவ்வப்போது மனிதனின் தலையில் குட்டு வைத்து திருந்திக்

கொள்ள சந்தர்ப்பம் கொடுத்தாலும் பேராசைப்பிடிக்குள்ளும் தனக்குத்தான் எல்லாம் என்ற ஆணவத்தனத்தாலும் சமூகத்தை புறக்கணித்துவிட்டு தனக்கான கல்லறைகளை தானே தோண்டிக் கொள்ளும் மனிதனின் குணநலன்களை இச்சிறுகதைகள் பேசுகின்றன.தீவினையும் நல்வினையும் அவரவரால் நேரப்படும் என்பதை விளக்கும் சிறுகதைகளும் பேசு பொருளாக மாறி இருக்கின்றன.

பெருவெள்ளம் புயல் என ஊருக்குள் புகுந்து காணும் உயிர்களை கபளீகரம் செய்து கொண்டும் தென்படும் பொருட்களைத் தின்று செரித்தும் நகர்கையில் ஓலைக் குடிசை வீடு எம்மாத்திரம்? அங்கம்மாளை அள்ளிச் செல்லாத புயலுக்கு நன்றி சொல்வதா? இல்லை நீரளவே தன்னையும் உயர்த்திக் கொள்ளும் ஆம்பலின் ஒப்புயர்வான நேசத்தை ஒப்பிடும் அன்பை அள்ளிக் கொஞ்சுவதா? ""நீராம்பல்"" கதை அப்படியானதொரு அன்பை நமக்குள் விதைத்துச் செல்கிறது.

ஆண்டுகள் 100 முன்னோக்கிப் போயினும் அறிவியலின் வழியே மனிதன் புதிய புதிய வழிமுறைகளில் வாழப் பழகினாலும் அப்போதும் கிராமங்கள் இருக்கும் என்று உறுதிபடச் சொல்லும் முதல் கதையின் வரிகளுக்குள் வாசிக்க முடியாமல் நிலைத்து விடுகிறோம். குக்கிராமங்கள் இல்லாத முழுமை பெற்ற தேசத்தில் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தன்னிறைவை எட்டுவது? மனித உயிரை கூண்டுக்குள் அடைத்து வைத்து தேவைப்படுகையில் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தில் நிம்மதியாக மனிதன் இருக்கும் காலத்திலும் அரசியல்வாதிகளின் உருட்டும் புரட்டும் ஓயவில்லையே என்ற வேதனையின் உச்சமே ""எவ்வழி அறியோம்"" கதையின் அடிப்படையாக அமைந்து விடுகிறது. எப்பாடுபட்டாவது இவர்களை ஒழிப்பதால் மட்டுமே உலகத்தின் நிம்மதி உயிர் வாழும் என்பதை நமக்குள் உணர்த்தி விடுகிறது இக்கதை.

## வாசிப்பு அனுபவம்

கொள்ள சந்தர்ப்பம் கொடுத்தாலும் பேராசைப்பிடிக்குள்ளும் தனக்குத்தான் எல்லாம் என்ற ஆணவத்தனத்தாலும் சமூகத்தை புறக்கணித்துவிட்டு தனக்கான கல்லறைகளை தானே தோண்டிக் கொள்ளும் மனிதனின் குணநலன்களை இச்சிறுகதைகள் பேசுகின்றன.தீவினையும் நல்வினையும் அவரவரால் நேரப்படும் என்பதை விளக்கும் சிறுகதைகளும் பேசு பொருளாக மாறி இருக்கின்றன.

பெருவெள்ளம் புயல் என ஊருக்குள் புகுந்து காணும் உயிர்களை கபளீகரம் செய்து கொண்டும் தென்படும் பொருட்களைத் தின்று செரித்தும் நகர்கையில் ஓலைக் குடிசை வீடு எம்மாத்திரம்? அங்கம்மாளை அள்ளிச் செல்லாத புயலுக்கு நன்றி சொல்வதா? இல்லை நீரளவே தன்னையும் உயர்த்திக் கொள்ளும் ஆம்பலின் ஒப்புயர்வான நேசத்தை ஒப்பிடும் அன்பை அள்ளிக் கொஞ்சுவதா? ""நீராம்பல்"" கதை அப்படியானதொரு அன்பை நமக்குள் விதைத்துச் செல்கிறது.

அறத்தை அழித்துவிட்டு அடுத்தவர் உரிமைக்குள் உயிர் வாழ்பவனுக்கு இறப்பு எப்போதும் உடனிருந்தே வினை தீர்க்கும் என்பதே "மஞ்சள் புரவிக்கு முத்தமிட்டவன்" கதை பாடம் சொல்கிறது.

தீண்டாமைத் தீயால் மேல் சாதிக் குளமும் கீழ் சாதிக் குளமும் என இயற்கையை பிரித்து இருக்கும் மனிதர்களை பெண் நினைத்தால் இணைத்து வைக்க முடியும் என்பதை "அல்லிக்குளம்" சொல்லிவிடுகிறது.

தனக்கான கடமையும் உலகத்தை சீராகச் சுழல வைக்க தான் கொடுக்கும் உன்னத உழைப்பும் சில மனிதர்களை காலத்திற்கும் நிலை பெற வைத்து விடுகின்றன. வலியோ வேதனையோ கோபமோ எதையும் தனக்குள் ஏற்றிக் கொள்ளாமல் தனக்கான வேலைகளை திறம்படச் செய்யும் பன்னீர்செல்வம் போன்றவர்கள் இருக்கையில் நடைபெறும் எல்லா சோதனைகளுக்குள்ளும் நல்வினையை உணர்ந்து கொள்ளலாம். ஒழுங்கு திடீரென்று வருவதில்லை அதற்குப் பழகியவர்கள் எங்கும் ஒரு நெறியை பின்பற்றுகிறார்கள் ஊரே

## வாசிப்பு அனுபவம்

வெள்ளக்காடாய் மாறிய போதும் எறும்புகள் அழிந்து விடவில்லை. மரத்தில் ஏறி தப்பித்து மறுபடியும் மண்ணில் புற்றெடுப்பது போல மனிதர்களில் சிலரும் இருக்கிறார்கள். பன்னீர் போன்ற மனிதர்களே வாழ்வின் சக்கரத்தை தடம் புரளாமல் உன்னதப் பாதையில் நகர்த்திச் செல்லும் மீட்சிக்கு தகுதியானவர்கள் என்பதை "மீட்சி" சிறுகதை அறியத் தருகிறது.

குடியும் குடியின் கொடும் போதையும் குடித்தனத்தை எப்படி சீரழித்து சாக்கடைக்குள் தள்ளி விடுகிறது என்பதை "அன்னலட்சுமி" கதையின் வாயிலாக எச்சரிக்கும் எழுத்தாளருக்கு அதிகாரம் கை வரும்போது மதுவும் காணாமல் போய்விடலாம்.

தன்னிடம் படிக்கும் பிள்ளைகளை தன் பிள்ளைகளாகக் கருதி அவர்களுக்குத் தெரியாமலேயே உதவி செய்து ஆளாக்கிவிடும் ஆசிரியரின் இறுதி காலத்தை அவர்கள் எப்படி மீட்டுக் கொடுத்தார்கள் என்பதை "அந்தணம்" கதை பாடம் நடத்துகிறது. பணத்தின் பின்னால் மனத்தை அலையவிடும் மனிதர்களே மனத்தின் பின்னால் மகிழ்ச்சியை கூட்டிக் கொள்ள பணம் மட்டுமே உதவுவதில்லை என்பதையும் இக்கதை உணர்த்தி விடுகிறது.

புதிய புத்தகத்தைப் பிரித்து அதற்குள் முகத்தைப் புதைத்து கண்களை மூடி அதன் புத்தம் புது காகித வாசனையை நாசி விடைக்க ஆழ்ந்து இழுத்து லயிப்பார். தாழாத ஆசையுடன் புதிதாக திருமணமானவன் மனைவியை வாஞ்சையுடன் தழுவுவதைப் போல.

தன்னைச் சுற்றி நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளையும் தன்னைக் கடந்து செல்லும் அன்றாட மனிதர்களின் மீதான அவதானிப்புச் சித்திரமும் கொண்டு வாழ்வின் நிலையாமைக்குள் அறத்தையும் கருணையையும் மனிதர்கள் மீதான அன்பையும் நல்வினைகளின் மீதான நம்பிக்கையையும் கடவுளை விட காணும் மனிதர்களை கவனியுங்கள் என்ற கரிசனத்தையும் நமக்குள் விதைக்கிறது மஞ்சள் புரவிக்கு முத்தமிட்டவன் நூல்.

கவிஞர் இளையவன் சிவா

# ந.மு. வேங்கடசாமி நாட்டார்

கட்டுரை



பிறப்பு

தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரியில் ஏப்ரல் 2, 1884 ல் தாயார் தைலம்மாள், தந்தை முத்துசாமி தம்பதிக்கு ஐந்தாம் மகனாக பிறப்பு. இவரின் இயற்பெயர் சிவப்பிரகாசம். ஆனால் இவர் ந.மு.வேங்கடசாமி என்றே தமிழுலகில் நிலைபெற்ற புகழைப் பெற்றிருக்கிறார்.

படிப்பு

சிறு வயதில் அக்காலத் திண்ணைப் பள்ளியில் படித்தார். இக்கால நான்காம் வகுப்புக்குச் சமமான படிப்பு அது. திண்ணைப் பள்ளியிலும், தந்தையிடமும் எண்சுவடி, குழிமாற்று, நெடுங்கணக்கு, இலக்கம், நெல்லிலக்கம், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, வெற்றிவேட்கை, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது போன்றவைகளைக் கற்றுத் தேர்ந்தார்.

சுயம்பு

இவரின் தந்தை வேளாண் தொழில் செய்பவர். அதனால் பகலில் தந்தைக்கு உதவியாக கழனியில் வேலை செய்வதுடன், இரவில் படிக்கத் தொடங்கினார். இவருக்கு ஆசிரியர் என்று யாரும் இல்லை. ஆசிரியர் துணையின்றி நன்னூல் உள்பட தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும் கற்றார்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய பாண்டித்துரை அவர்கள் அச்சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க் அக்கல்லூரியில் மூவகைத் தேர்வுகள் இருந்தன.

அ. வில்சன், இதழாசிரியர்

1. நுழைவுப் பண்டிதம் (பிரவேசப்பண்டிதம்) , 2. இடைநிலைப் பண்டிதம் (பாலபண்டிதம்)

3. பண்டிதம்

ஆறு ஆண்டுகள் படிக்க வேண்டிய இப்பண்டிதர் படிப்பை, மூன்று ஆண்டுகளில் முடித்து முதல் மாணவராகத் தேறினார். இவரின் அறிவாற்றலைக் கண்டு வியந்த பாண்டித்துரையார், இவருக்குத் தங்கத்தாலான அணி ஒன்றைப் பரிசளித்துப் பாராட்டியிருக்கிறார்.

பணிகள்

கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர், எஸ்.பி.ஜி. கல்லூரின் தமிழாசிரியர், திருச்சி பிசப் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராக பணியாற்றிய இவர் - தமிழவேள் உமாமகேசுவரனார் பரிந்துரையில், கரந்தைத் தமிழ்கல்லூரியின் முதல்வராகப் பெறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார்.

ந.மு.வேங்கடசாமி சிறந்த சைவநெறியாளர். சென்னை மயிலாப்பூர் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராக ஓராண்டு பொறுப்பு வகித்து இருக்கிறார்.

நூற்கள் :

உ.வே.சாமிநாதரால் ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்குக் கொண்டுவரப்பட்ட அடியார்க்கு நல்லார், அரும்பதவுரைகாரர் ஆகியோரின் உரையுடன் கூடிய சிலப்பதிகாரத்திற்கு உரை.

**மணிமேகலைக்கும் உரை**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநாநூறு உள்பட தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவைகளுக்கு உரை. 'சேரன் செங்குட்டுவன்' என்ற சிறப்பான நூலை எழுதியவர் மூ.இராகவய்யங்கார். இவரின் இன்னொரு நூல் 'வேளிர் வரலாறு' இந்நூலைப் படித்த வேங்கடசாமி அவர்கள் அதிலுள்ள வரலாற்றுப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் தானும் ஒரு 'வேளிர் வரலாறு' நூலை எழுதினார். வேளிர் வரலாறு - சோழர் வரலாறு - கள்ளர் சரித்திரம் - நக்கீரர் - கபிலர் - கண்ணகி வரலாறும், கற்பும் மாண்பும் - கட்டுரைத் திரட்டு போன்ற நூல்கள் எழுதியிருக்கிறார். தமிழில் உள்ள வேர் சொற்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்க வேண்டும். புதிய சொற்களை உருவாக்க அல்லது கண்டுபிடிக்கத் தாமதமானால், வேற்று மொழிச் சொற்களைத் தமிழின் ஒலி இயல் இயல்புக்கு ஏற்பத் திரித்து வழங்க வேண்டும். எடுத்துக்காட்டு: ஜீசஸ் - இயேசு, ஜேக்கப் - யாகோபு என்று விளக்கம் தருகிறார் ந.மு.வேங்கடசாமி அவர்கள்.

**பட்டம்**

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 24.12.1940 ஆம் ஆண்டு இவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**மரணம்**

1944 ஆம் ஆண்டு மார்ச் 28, நாவலர் ந.மு.வேங்கடசாமி அவர்களை மரணம் ஆரத்தழுவி அழைத்துக்கொண்டு போய்விட்டது.

நன்றி --அன்பர் எழில்.இளங்கோவன்,--மறக்கமுடியுமா நூல் & திருநெல்வேலி தொல்லியல் கழகம்

நாளை

# நமதே

முதலில்

நீ போராட வேண்டியது

உன்னுடன்தான்

ஏனென்றால்

உனக்கு நடக்கும்

அனைத்திற்கும்

முதல் காரணம்

நீ மட்டும் தான்


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com